

# பச்சை இறகு

வேலணையூர்

பொன்னண்ணாவின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஹைக்கூக்கவிதைகள் 110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DIGTER
VELANAIYOOR PONNANNA
»Arivagam«
Solsortvej 18 st.th.
DK-7190 Billund - Denmark

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை இறகு



(ஹைக்கூ கவிதைகள்)

ஆசிரியர் :

வேலணையூர்

## பொன்னண்ணா

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 0091-44-4346082
மின் அஞ்சல் : Manimekalai@eth.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ பச்சை இறகு |
| ஆசிரியர் | ➢ வேலணையூர் பொன்னண்ணா |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2001 |
| பதிப்பு விவரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரெளன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 80 |
| நூலின் விலை | ➢ ரூ. 20.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ *Ulla BjerreGaard* |
| கருத்துப்படம் | ➢ திரு. *குமுதன்* |
| லேசர் வடிவமைப்பு | ➢ *கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர்,* சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ *ஸ்கிரிப்ட் ஆப்செட்,* சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ *மணிமேகலைப் பிரசுரம்* சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

மண்டைக்குள் எழுதி முடியால் மறைத்த
பிரமாவை அதிரவைத்து
சாகும்நேரம், விதம், இடம் அறிந்து
பிறந்தமண்ணின் விடியலுக்காய், தன்னினத்தின்
உரிமைக்காய் தன்னைக் கொடையாக்கி,
தன்னுயிரை, உடலைத் தணலாக்கும் மறவர்க்கும்,
அவரை கருத்தாங்கி பெற்று வளர்த்து
தாய்மண்ணில் மலரவைத்த் அந்த கருப்பையின்
சொந்தக்காரிக்கும்...
அவர்களின் பாதம்தொட்டு இக்கவிமாலையை
சமர்ப்பணம் செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



கவிஞர் திரு. வேலணையூர் பொன்னண்ணா அவர்களை நேரில் நான் அறிமுகப்பட்டது புத்தாயிரம் ஆண்டின் விழாக்கோல நாள் ஒன்றில். நேரில் சந்தித்த சில நிமிடங்களுக்குள் அவரது கவிதைகளும் எனக்கு அறிமுகமாயின. தூரத்து கிராமங்களில் தூய்மையோடும் எளிமையான கம்பீரத்துடனும் மலர்ந்து மயக்குகிற மென்மையான ரோஜாக்களைப் போல இருந்தன. இவரது கவிதைகள். இலக்கிய வான்பரப்பின் ஒளிவட்டங்களுக்குள் வராமல் இப்படி எத்தனை கவி நிலவுகள் தமிழுலகில் இருக்கின்றன என்பதை எண்ண மனம் கனத்தது.

என் நெஞ்சில் நிலைத்துவிட்ட இந்தக் கவிஞரின் இப்புத்தகத்தை வாழ்த்துவதை பெருமையாகவும் கருதுகிறேன்.

கடுமை என்பது கவிஞர் பொன்னண்ணா அவர்களுடன் கதைக்கும்போது காண்பது அரிது. ஆனால் கவிதைகளில் காத்திரம் நிரம்ப உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கடவுளை நேசிப்போர்*
*மறக்க வேண்டியது*
*மதத்தை....*

என்ற மூன்று வரிகளே போதும் அவரது கவிதை ஆளுமையின் காத்திரம் அறிய.

சூன்யத்தில் தொடங்கி முழுமைதேடி ஓடி மீண்டும் சூன்யத்தில் முடிவதே மனித வாழ்க்கை. வாழ்வையும் மரணத்தையும் இருத்தலின் இரு பக்கங்களாக ஏற்கிறவனே தெளிவு பெற்றவன்.

வாசனைத் திரவியங்களும், மினுக்குத் தூள்களும், ஜீன் விஞ்ஞானமும் அவனுக்கு அவசியமில்லை.

பொன்னண்ணா ஞானியாகிறார்,

*''புதிய தலைமுறைக்கு*
*இடம்விட்டுச் செல்வதே*
*முதியோர் மரணங்கள்''*

என்ற கவிதையில்.

கவிஞன் இயல்பான மனிதனாகவும் இருக்க வேண்டும்.

*''காச்சி இறக்கிய சோறும்*
*கணவனின் கோபமுமாற*
*நாளிகை சிலதான்''*

என்பதில் பொன்னண்ணா என்ற இயல்பான மனிதனை நான் தரிசிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை கவிதைகளிலும் புதிய பரிமாணங்கள். தமிழ்க்கவிதை உலகில் பொன்னண்ணாவுக்கு நிச்சயம் வரலாற்று இடம் உண்டு.

அவரை மகனாகப் பெற்றோரும், கணவனாகக் கொண்ட தாயும், தந்தையாகக் கொண்ட பிள்ளைகளும், பேறு பெற்றவர்கள்.

திரு. ம. ஜெகத் கஸ்பார் M.A.,
வேரித்தாஸ் வானொலி
தமிழ்ப்பிரிவு இயக்குனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்



எனது வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்று தளம் அமைத்துத்தந்து எனது ஆக்கங்களை தவறாமல் பிரசுரம் செய்து ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி எனது வளர்ச்சியில் உரமாய் இருந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்திற்கும் எனது நன்றியை சொல்லத்தவறின் நான் நடக்கும் பாதையில் சரியான நெறியை தவறவிடுகிறேனோ... என்று என் இதயத்தில் ஒரு கேள்விக்குறி எழுவதற்கு முன்பாக இந்தப் பணி...

- கற்பகம், டென்மார்க்.
- காகம், டென்மார்க்.
- உலகத் தமிழர் பத்திரிகை, கனடா.
- உதயன், கனடா.
- வீரகேசரி, இலங்கை.
- தினக்குரல், இலங்கை.
- ஈழநாடு, பரிஸ்.
- சுட்டுவிரல், பரிஸ்.
- பூவரசு, யேர்மனி.
- இளைஞன், யேர்மனி.
- தாகம், யேர்மனி.
- சர்வதேச தமிழர் மாதசஞ்சிகை, நோர்வே.
- ஏழைதாசன், இந்தியா.
- ராணி, இந்தியா.
- தமிழ் அலைகள் இணையப் பத்திரிகை, டென்மார்க்.
- அருவி, மலேசியா.
- தமிழ்அருவி, யேர்மனி.
- அரும்பு, டென்மார்க்.
- ஈழமுரசு, சுவிஸ்.

இத்தனை ஆசிரியர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

வேலணையூர் பொன்னண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

டென்மார்க்கில் வசிக்கின்ற வேலணையூர் பொன்னண்ணாவின் கவிதைகள் ஐந்தாவது தொகுப்பாக வெளிவருவது மகிழ்ச்சியான விடயம். கவிஞர் பொன்னண்ணா ஈழநாட்டு நினைவுகளை அடிப்படையாக்கிப் பல இனிய கவிதைகளைப் படைத்திருக்கிறார்.

சமூக அவலங்கள் குறித்து அங்கதச் சுவையுடன் கவிதைகள் இயற்றுவதில் தேர்ந்தவர் அவர்.

அவரது ஹைக்கூ கவிதைகள் மனித இயல்புகளையும், மனிதரது போலித்தனங்களையும் சமூகச் சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டுகின்றன.

கவிஞருக்கு எனது பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

வல்லிக்கண்ணன்
சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை இறகும்
# பச்சை மனமும்



26.05.1939-ம் ஆண்டு தனது பிறப்பை நிகழ்த்திக் கொண்டு இன்று 62 அகவையை அடையும் எனது மதிப்புக்குரிய திரு. வேலணையூர் பொன்னண்ணா அவர்களே!

நீங்கள் வயதால் மட்டுமன்றி வார்த்தைகளாலும் வளர்ந்திருக்கின்றீர்கள்.

ஏற்கனவே வெளிவந்த தங்களுடைய "நிலமாகி" "வெந்தவனம்" ஆகிய இரண்டு கவிதைத் தொகுதிகளோடு இந்தக் கவிதைகளை ஒப்பீடு செய்யும்போது....

இந்தக் கவிதைகள்...

புதிய வடிவம்,

புதிய பாடுபொருட்கள்,

புதிய கவிதை அணி, என மாறுபட்டிருக்கின்றன.

ஆனால்,

இந்தச் சமுதாயத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள கோபம் இருக்கிறதே...

அது மட்டும் மாறாமல் அப்படியே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே உங்களிலும் உங்கள் கவிதைகளிலும் எனக்குப் பிடித்த விடயமாகும்.

மனிதகுலம் அவசரமாக சுழன்றுகொண்டிருக்கின்றது. இந்த அவசரத்துள் எடுக்கப்படுகின்ற காரியங்களிலும் பல தவறாகவே நடந்துகொண்டிருக்கின்றன. அத்துடன் மாற்றங்களும் மாறாமலேயே தலைகீழாகவே நடந்து கொண்டிருக்கின்றன

மனிதனுக்கு இன்று நின்று சாவகாசமாகப் பேச முடியவில்லை.

அதனாலோ என்னவோ எல்லாமே தாம் பெறுகின்ற மாற்றங்களுக்குள் "சுருக்கம்" என்பது முக்கியம் பெறுகிறது.

இந்த மாற்றப்பாட்டுக்குள் கவிதை சுருக்கம் பெறும் போது அது தன்னை பண்டைக்கால மரபுக்குள் கொண்டு செல்கிறது. அந்தப் பழைய மரபுக்குள் நின்றுகொண்டு எல்லைகளற்று கட்டுப்பாடுகளற்று இவரது கவிதைகள் பேசுகின்றன.

உலகில் யுத்தம் நடக்கும் இடங்களிலெல்லாம் மனிதர்கள் படும் அவஸ்தைகளையெல்லாம் இன்றும் கவிதைகள் அழுதுகொண்டே பேசுகின்றன.

அதேபோல... இன்று ஈழத்தில் நடந்துகொண்டிருக்கும் யுத்தமும், அதனுள் மக்களுமாக... என்ன கொடுமை.

காவலரண்வாசலிலும், இராணுவ முகாம்களுக்குள்ளும், தனித்து நிற்கும் பற்றைமறைவிலும், பூசை முடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாகக் கிடக்கும் கோவில்களிலும், வயல்களுக்கு இட்டுச் செல்லும் ஈழத்து ஒற்றையடிப் பாதைகளிலும்,

தமிழ்ப் பெண்களுக்கு எதிராக நடக்கும் ஆண்பிள்ளை இராணுவக் கொடுமைகளை கேள்வியுற்று நெஞ்சுகுலுங்கிக் கொண்டிருக்கும்போது....

பொன்னண்ணாவின் கவிதை ஒன்று சொல்கிறது...

*"திறந்து கிடக்கும் கூட்டுக்குள்*
*கிளியைக் காணவில்லை.*
*இராணுவப் பூனையின்வாயில் பச்சைச்செட்டை."*

இதைவாசிக்கும் போது நெஞ்சும் ஒரு முறை நின்று விட்டு மீண்டும் இயங்கியதை உணர்ந்தேன்.

சுதந்திரத்தையும் மானுட மகிழ்ச்சியையும் எரிவற்ற வாழ்வையும் வேண்டிநிற்கும் இவரது கவிதைகளுக்கு முகமாக இந்த நூலை "பச்சை இறகு" என்று பொன்னண்ணா அழைப்பதில் எனக்கும் மகிழ்ச்சியே.

வாழ்த்துக்கள்!

அன்புடன்,
**முல்லையூரான்,**
டென்மார்க்.
02.08.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடலும் பொன்னண்ணாவும்



"ஓடும் நதியை - பறக்கும் பறவையை - பயிர்நுனிப் பனித்துளியைக் கண்டு கற்பனையில் பறக்கும் கவிஞனல்ல நான். நான் மாறுபட்டவன். எனது கற்பனைகளும் சுவைகளும் மாறுபட்டவை. என் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளுக்கு உணர்வுருவாக்கம் கொடுக்கப்பட்டவைகளே இக்கவிதைகள். இதனால் காலநீரோட்டத்தின் தேவையின் அவசியமுணர்ந்து கவிதைகள் மக்களைக் கண்விழிக்கச் செய்யவேண்டும் என்ற கருத்து நிர்ப்பந்தம் எமக்கு உண்டு." இது கவிஞர் பொன்னண்ணாவின் "வெந்தவனம்" கவிதைத் தொகுதியின் படைப்பாளர் குறிப்பிலே அவரே சொன்னவரிகள். தன்னைத்தான் உணர்தல் என்பது ஒவ்வொரு படைப்பாளிக்கும் முக்கிய கடமையாகிறது. இந்த உணர்தல் இல்லாத எவரும் சிறந்த படைப்பாளிகளாக மாறியதில்லை. தான் யார் என்பதைச் சரியாக உணர்ந்தவர்தான், தான் வாழும் சமுதாயத்தின் - நாட்டின் - உலகின் உணர்வுகளையும் தெளிவாகப் படம் போட்டு விடமுடியும்.

"காலநீரோட்டத்தின் தேவையுணர்ந்து மக்களைக் கண்விழிக்கச் செய்ய வேண்டும் கவிதைகள்" என்பது பொன்னண்ணாவின் வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் சூழலில் பிரசுரிக்கப்படும் படைப்புக்கள் சரியான முறையில் மக்களைச் சென்றடைவதில் ஏற்பட்டிருக்கின்ற சாதகமற்ற தன்மைகள் ஒரு புறம் தொடர்ந்துகொண்டே இருக்க அவர்களை இத்துறைக்குள் இழுத்து வருவதற்கான முயற்சிகளாக படைப்புக்களின் உருவாக்கத்திலும் மாற்றங்கள் அவ்வப்போது தேவைப்படுகின்றன.

இயந்திரமயமாக்கப்பட்ட வாழ்வுச் சூழலில் ஓடிக்கொண்டே இருக்கும் வாசகனை இழுத்து நிறுத்தி இந்தா இதைப்படி என்று அவனது கையில் தரப்படுவது அவனது கைக்குள் அடக்கமாக இருந்தால் மட்டுமே அவன் அதை ஏந்திக்கொள்கிறான். இல்லாவிட்டால் எனக்கு நேரமில்லை என்று கைவிரித்து ஓடுகிறான்.

மரபுக் கவிதைகளிலிருந்து புதுக்கவிதைக்கான பாய்ச்சல் என்பது தமிழ்க்கவிதையுலகுக்கு வந்து பல வருடங்கள் ஆகியபின்பும் புதுக்கவிதை என்பது இன்றும் புதுக்கவிதையாகவே இருக்கிறது, பெயரளவில்! ஆனால் புதிதாக எழுதப்படும் மரபுக்கவிதைகளும் புதுக்கவிதைகள்தானே, அதாவது புதிய கவிதைகள்தானே!

ஆனால் புதுக்கவிதை எனும்போது அதுமரபின் முகம் காட்டுவதில்லை. அதனால் அது புதுக்கவிதை.

புதுக்கவிதையினைச் சாறுபிழிந்து ஹைக்கூ கவிதைகளாக்கி அரங்கிற்கு கொண்டு வந்தாகிவிட்டது. சுலபமாக மனதைத் தொட்டிழுத்து தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்கிற தன்மையினால் உயர்ந்து நிற்கின்றன ஹைக்கூக்கள்.

தனது உணர்வுகளை வெளிப்படுத்த ஹைக்கூவை ஒரு சிறந்த கருவியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் பொன்னண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையின் எல்லா வடிவங்களையும் கையாள முனையும் அவரது கவிதைத் திறனின் வெளிப்பாடுகளில் ஒன்றாக இந்தக் கவிதைத் தொகுதியும் வெளியாகிறது.

ஏற்கனவே வெளியான அவரது கவிதைத் தொகுதிகள் போல் இதுவும் அவரது கவிதைத் திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழும் என்பதோடு மேன்மேலும் பல கவிதைத் தொகுப்புக்களை வெளியிட அவருக்கு உற்சாகம் தரும் என்றும் நம்புகிறேன்.

ஜெர்மனி
10.09.2001

அன்பன்
**இந்துமகேஷ்**
ஆசிரியர் : பூவரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னண்ணாவின் வஞ்சகமற்ற முன்வைப்பு

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராதவர்கள் எல்லாத் துறைகளிலும் உண்டு. கவிதைத் துறையில் அப்படியோர் முயற்சியாளராக பொன்னண்ணா திகழுகிறார். டென்மார்க்கில் இருந்து அதிகமாக வெளிவந்த அவருடைய கவிதைத் தொகுதிகளே அதற்குச் சான்றாகும்.

அதிகமான தொகுதிகளை வெளியிடுவதில் பயனில்லை, தரமான ஒரு தொகுதியை வெளியிடுவோம் என்று பலர் கூறுகிறார்கள். இதனால் தமது படைப்புக்களை தொகுப்பாக்காமலே அதில் சிலரது கவிதை முயற்சிகள் தடயமற்றுப் போய்விடுகின்றன. தரமா தரமில்லையா என்பதை தீர்மானிப்பது வாசகர்களே. தரமுள்ள எதையும் வாசகர்கள் இதுவரை நிராகரிக்கவில்லை. அதே போல தரமற்ற எதையும் வாழவைக்கவுமில்லை. இந்த உண்மையை தெரிந்து கொண்டு எந்தவித மனத் தடையும், கவிதை வீதியின் சிகப்புப் பச்சை விளக்குகளின் அச்சமும் இல்லாமல் இங்கு மனம்போல துள்ளி விளையாடுகின்றன பொன்னண்ணாவின் கவித்துவ எண்ணங்கள்.

சமீபத்தில் ஓர் வானொலிப் பேட்டியில் எதுகவிதை என்ற கேள்விக்கு விளக்கமளித்த பொன்னண்ணா எது கவிதை என்பதல்ல கேள்வி, என் வாழ்வு கவிதைதானா? என்ற பதிலே கவிதைக்கான தனது விளக்கம் என்றார். இந்தப் பதில் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. இப்படியோர் பதிலைக் கூறுவதற்கு மிகப்பெரிய துணிச்சல் வேண்டும். இதுவரை எந்தக் கவிதை வரையறைகளும் இவ்வாறு கவிதைக்கு விளக்கம் கண்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் அந்தப் பதிலிலும் ஓர் உண்மை இருப்பதை உணர்ந்தேன். பொன்னண்ணாவையும் அவர் கவிதைகளையும் தூரநின்று பார்த்தால் அவருடையவாழ்வையும் அவருடைய படைப்புக்களையும் அவர் கவிதை நிலைக்குக் கொண்டு வர போராடிக் கொண்டிருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவரும். பூரணம் பெறுவதற்குப் போராடுவதே கவிதையின் முடிவில்லாப் போராட்டம் என்ற நிலையோடு ஒப்பிட்டால் பொன்னண்ணாவின் பதிலில் ஓர் உண்மை மறைபொருளாக இருப்பதை உணரலாம்.

இந்தப் பதில் போலவே இந்தத் தொகுப்பும், இங்குள்ள எல்லாக் கவிதைகளிலும் உயிர்நாடியாக ஒருவிடையம் தென்படுகின்றது. அதுவே வஞ்சகமில்லாத முன்வைப்பு. எந்த ஒரு வாசகனும் கவிஞரின் எண்ணத்தின் நிறைவையும், நிறைவின்மையையும் இங்கு சட்டென இனங்கண்டு விடலாம். யாருக்கும் விளங்காமல் கவி படைப்போரிடம் இந்த நேர்மை இல்லை. எளிமை என்பது சொற்கள் சார்ந்ததல்ல. எண்ணங்கள் உட்பட எல்லாமே அதற்குள் அடங்கும். இந்தத் தொகுப்பின் சிறப்பே இதுதான்.

ஹைக்கூக் கவிதைகள் மிக அழகாக விழுந்தால் அவற்றை வெல்ல வேறெந்தப் படைப்பாலும் இயலாது. அந்த வகையில் மனதைக் கொத்தும் அழகான வெளிப்பாடுகள் பல இதில் உண்டு. எளிமை, உண்மை நமக்குத் தெரிந்தது இது தான் என்ற வெளிப்படையான உள்ளடக்கம் இவைகள் நல்ல கவிதைகளின் அடையாளம். இந்த எண்ணங்களை பின்புலமாக வைத்து இந்தத் தொகுப்பை வாசித்தால் நிச்சயம் பொன்னண்ணாவிற்கு நீங்களும் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதுவீர்கள். எந்தப் பூக்களும் ஏதோ ஒரு தேவை இல்லாமல் பூமியில் பூப்பதில்லை. அதுபோலவே இந்தப்பூவும் உங்கள் கைகளில் தவழுகிறது. மகிழ்ச்சியடைய தயக்கமேன்? புறந்தள்ளும் எண்ணங்களை புறந்தள்ளி பொன்னண்ணாவின் முயற்சிகளை வரவேற்பதில் உங்களோடு நானும் இணைகிறேன்.

நாவலாசிரியர்

— சி.செ. துரை

(ஆசிரியர், அலைகள், இணையப்பத்திரிகை)

04.09.2001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுகளை உடைத்தெறிந்த அந்தப் பொடியன்

கவிஞர் பொன்னண்ணாவின் படைப்புக்கள்பற்றி நான் அறிந்ததும், அவரைச் சந்திக்க விரும்பவே கவிஞர் முல்லையூரான் அவர்கள் எனக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். ஓர் இரவு பூராயிருந்து மனம் விட்டு நிறையவே பேசினோம். எம் இன விடுதலைமேல் கொண்டுள்ள பற்றையும், அதற்காக தனது கவிக்குரல் உயரும் என்ற கருத்தையும் முன் வைத்தார். சந்திப்பின் இறுதிக்கட்டமாக நோர்வே தேன்தமிழோசை வானொலிக்காய் பேட்டி ஒன்று தரும்படி கேட்டேன். சிரித்த முகத்தோடு சம்மதித்தார்.

''நீங்கள் தமிழ் எழுத்துலகில் நுழைவதற்கு யாராவது உந்துசக்தியாய் இருந்தார்களா?'' என்ற எனது முதற்கேள்வியைக் கேட்டதும் எனது விழிகளை சில வினாடிகள் உற்றுப் பார்த்து விட்டு விம்மி அழுதார். நான் ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்திவிட்டேன். சில வினாடிகள் ஒய்வின் பின்னர் ஒலிப்பதிவு மீண்டும் ஆரம்பமானது.

எழுத்துலகிற்குள் தான் காலடி எடுத்து வைத்தது ஓர் விபத்து என்றும், அதற்குப் பின்னால் ஒரு பெருங்கதை இருக்கின்றது என்றும் கூறியபடி தொடர்ந்தார்....

''1959ஆம் ஆண்டில் தனது தாயார் இறந்ததும் நினைவுமலர் ஒன்றைத் தயாரிக்க கவிதை எழுதித் தரும்படி வேலணையில் பிரபல்யமான ஒரு புலவரை அணுக....

புலவரோ பல நிபந்தனைகளை விதித்ததாகவும், அதாவது நான்கு வரிகளுக்கு ஒரு ரூபா விலை கொடுக்க வேண்டும். தானே அக்கவிதைகளை உரைக்கவும் வேண்டும். அதற்காக தன்னைக் காரில் ஏற்றிச் செல்ல வேண்டும் என்றும் நிபந்தனைகள் விரியவே கோபமுற்ற பொன்னண்ணா தானே கவிதைகளை எழுதி நினைவு மலரைத் தயாரித்ததாக'' கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சம்பவமானது என்னை மிகவும் வியக்க வைத்தது. பொன்னண்ணாவின் இலக்கியத் திறனை வெளிக்கொணர்வதற்கு அவரது அன்புத் தாயார் இறக்க வேண்டியிருந்திருக்கிறது. இச்சம்பவத்தின் பின்புலத்தில் ஒரு இலக்கிய வரலாறு இருப்பதாக உணர்கிறேன்.

அதாவது... 1950களின் பிற்பகுதியில் ஈழத்து எழுத்துத் துறையில் ஈடுபட்டவர்களைப் பார்ப்போமானால் அவர்கள் படித்தவர்களாய் இருந்திருப்பார்கள்.

உயர்சாதியென நம்மக்கள் கூறுபோட்டவர்களாயிருப்பார்கள். இவ்வாறு அதற்கென ஒருவர்க்கம் இருந்திருக்கிறது. ஆனாலும் பல கிராமங்களில் படிப்பறிவற்ற பல படைப்பாளிகள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களது படைப்புக்கள் ஏட்டில் வராமலேயே போயிருக்கிறது.

இவ்வரையறைகளை உடைத்தெறிந்து யாரும் கவிதை எழுதலாம். மேடைகளில் யாரும் கவிதை உரைக்கலாம், அதை வெளியிடலாம் என அந்த இளம்பிராயத்திலேயே நிரூபித்தவர் பொன்னண்ணா அவர்கள்.

எமது சமூகத்தின் மாபெரும் பிற்போக்குத்தன்மைக்கு சாவுமணி அடித்திருக்கிறார். தமிழிற்கு இடப்பட்டிருந்த விலங்கை உடைத்திருக்கின்றார்.

பொன்னண்ணாவின் படைப்புக்களில் சமகால அரசியல், பெண்ணியல், புலம்பெயர் வாழ்வியல் பற்றி விரிந்து செல்வதைக் காணலாம். கவிதை எழுதுவதோடு மட்டும் நின்றுவிடாது உரியகாலத்தில் அவற்றை வெளியிடுவதிலும் சிரத்தை எடுத்து வரும் கவிஞர் பொன்னண்ணாவை நோர்வே தேன் தமிழோசை நேயர்கள் சார்பில் வாழ்த்தி நிற்கின்றேன்.

**யூலியஸ் அன்ரனி**
நோர்வே தேன்தமிழோசை நிகழ்ச்சிப் பொறுப்பாளர்
21.09.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வணக்கம்!

அன்புடையீர்...

நான் இலக்கியப் பயணத்தில் தொடர்ந்து பயணிக்க என் பயணத்தின் பாதையாய் படிக்கட்டாய் தொடர்ந்து என் நரம்பின் குருதியாய் பணிதொடரும்.... என் அன்புக்குரிய வாசகப் பெருமக்களே!

முன்னர் "நிலமாகி", "வெந்தவனம்", "அன்னை அபிராமி பஜனைப் பாடல்கள்", "பக்திப் பஜனைப் பாமாலை" ஆகிய நூல்களைத் தந்து இலகுதமிழை, தமிழர் மனச் சுமையை, பக்தி நெறியை தமிழ்க்கவிதைகளால் சுவைக்க வைத்தேன்; ஏற்றீர்கள்.

இந்தத் தடவை புதுமையான ஒரு வடிவத்துடன் உங்களை அணுக விரும்பியுள்ளேன். தமிழ், இலக்கியப்பரப்பில் பல வளர்ச்சிகளைக் கண்ட மொழியாகும். முற்காலத்தில் பனையோலையில் எழுதிப் படித்த காலத்தில் ஔவையார் காலத்தில் ஓரடிக் கவிதைகளும், வள்ளுவர் காலத்தில் ஈரடிக்கவிதைகளும் தந்த தமிழ் இலக்கிய உலகம் ஒரு படி முன்னேறி, நாயன்மார் காலத்தில் வெண்பா எனவும், எண்சீர் எனவும், கம்பர் - இளங்கோ காலத்தில் பத்துப் பன்னிரண்டு அடிகளாக மாற்றம் பெற்று பின் புதுக்கவிதைக் காலத்தில் கவிஞனின் கற்பனைக்கேற்ப கவிதைவரிகள் வளர்ச்சி கண்டு வந்தன; வருகின்றன.

ஆனால் இன்றைய மனித வாழ்கையில் வாசிக்கும் பழக்கம் மிகமிகக் குறைவடைந்தே வருகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்ந்தால் நேரமும் அவசர வாழ்வுமே பதிலாக வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஒரு சூழலில் கவிதையை சுவைக்க வைக்கும் நோக்குடன் மூன்று வரிகளில் கருத்தைச் சொல்லும் ஜப்பானிய பழைய கவிதை வடிவமான ஹைக்கூகவிதை வடிவத்துள் நின்று கொண்டு, எம் தமிழர் பனையோலை ஏட்டுக்காலத்தையும் ஞாபகப்படுத்தி, நாளை விடியவிருக்கும் தமிழீழத்திற்கு இப்புதிய கவிதை வடிவங்களையும் எடுத்துச் செல்லலாம் என்ற நல்ல நோக்கில் இந்தப் புதிய வடிவத்தை புலம் பெயர் மண்ணில் முதலாவதாக முன்வைக்கிறேன்.

இதன் வாழ்வும் வளர்ச்சியும் வாசகர்களாகிய உங்கள் கைகளில்.

மேற்படி இலக்கியபட்டறைக்குள் என்னை இழுத்து வந்து நிறுத்தி இன்றுவரை என் முயற்சிகளுக்கு உரம்போட்டு வளர்த்து வரும் உடன்பிறவாச் சகோதரன் அன்புத்தம்பி முல்லையூரானுக்கும், அவரை ஊக்குவிக்கும் அன்புத்தங்கை நாகேஸ்வரிக்கும், வழமைபோல் நான் நலமுடன் இயங்க மருந்துக்குளிகையாய் பணிதொடரும் என் அன்பு மனைவி பொன்மணிக்கும் நன்றிசொல்லி தள்ளிவைக்காமல் என் இதயச் சுவரில் வண்ணம் தீட்டி வரைந்து வைக்கிறேன். அத்தோடு இந்தக் கவிதை நூலுக்கு அணி சேர்க்கும் விதமாக பலரது கருத்துரைகள் இடம் பெற்றுள்ளன. அந்தக் கருத்துரைகள் வழங்கிய அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். இக்கவிதை நூல்சிறக்க கருத்துப்படம் வரைந்த ஓவியர் குமுதன் அவர்கட்கும், அட்டைப்படம் வரைந்து உதவிய திருமதி Ulla Bjerregaard அவர்கட்கும், பிரசுரித்துதவிய தமிழக மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

Solsortvei 18; st.th
DK. 7190 Billund,
Denmark
Tele & Fax : 75338792

அன்பன்
வேலணையூர் பொன்னண்ணா.
டென்மார்க்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை
உறக்கம் கலைத்து
மண்ணை நினைக்கவைக்கும்
"கவிஞர் பொன்னண்ணாவை"
இவ்வுலகிற்கு ஈந்த அவர் பெற்றோர்
மறைந்த பொன்னையா, பொன்னம்மா
அவர்களிருவரின் நினைவுகளோடு
கவிதைக்குள் நுழைவோமா!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகும் இதர கவிதைகள்!

## இதர கவிதைகள்

| | |
|---|---|
| என் இனிய இளைஞனே - சம்சுதீன் | 30.00 |
| இளம் நெஞ்சின் ஏக்கங்கள் - கார்த்தீசன் | 26.00 |
| கானமெனும் வீதியிலே - பழ. பாண்டுரங்கன் | |
| உலகமெனும் திரையரங்கில் -ஸ்விஸ் அருளானந்தம் | 15.00 |
| எனது தேடல்கள் -.கா.சிவகரன் | 24.00 |
| ஏணியும் எழுத்தாணியும் -வசந்தா வீரராகவன் | 24.00 |
| விழித்தெழு வீசிடும் காற்றாய் மாறிடு -அருளானந்தம் தேவேந்திரன் | 22.00 |
| நினைவுகளின் அடைமழை - சந்திரா மோதிலால் | 16.00 |
| ஏழைக்கு இரங்கிடுவோம் - இரா.ஜானகிராமன் | 21.00 |
| தமிழ்த் தோட்டத்தில் தெலுங்கு குயில்கள் - சாந்தா தத் | 17.00 |
| என் உயிரும் உன் முகவரியும் - ஏ.சி.றாஹில் | 16.00 |
| புலராத பொழுதுகள் - திடலூர் ஞானி | 17.00 |
| தொலைந்த மனம் தேடி - ஆர்.மோரிஸ் ஜாய் | 22.00 |
| கோசல்யா கவிதைகள் - கோசல்யா சொர்ணலிங்கம் | 26.00 |
| மற்றவை நேரில் - த.சீனிவாசன் | 29.00 |
| ஆத்ம அலைகள் - எஸ் நாகேந்திரன் | 20.00 |
| உணர்வுகள் | 30.00 |
| ஹைக்கூவில் அய்யன் திருவள்ளுவர் காதல் மொழி-புதூர் அன்பழகன் | 22.00 |
| நினைவுகளின் நிழற்போர் - அந்நியன் | 13.00 |
| கவிதைக்கு என்ன வேலி - பாரீஸ் பார்த்தசாரதி | 20.00 |
| கண்துயிலாக் காதல் - போளூர் எல். பாபு | 36.00 |
| இதயம் விழித்து இமை திறவாமல் | 25.00 |
| கண்ணால் உன்னைத் தொடுகிறேன் | 35.00 |
| நீயே என் நினைவுகளாய் | 21.00 |
| புதுக்கவிதைகள் - ஓர் அலசல் | 43.00 |
| விலாசம் தேடும் வித்துக்கள் | 21.00 |
| பாலைவனத்தில் ஒரு மலர் விரிப்பு | 21.00 |
| மலரம்புகள் ( பாடல்கள்) | 28.00 |
| சும்மாவா கிடைத்தது சுதந்தரம் | 35.00 |
| ஒரு கிராமத்துக் கதறல் | 26.00 |
| தமிழுக்கு முளைத்த சிறகுகள் | 23.00 |
| விண்மீன்கள் இங்கே விற்பனைக்கு | 26.00 |
| மனதிற்குப் பிடித்த மழைத்துளிகள் | 15.00 |
| தமிழுக்கு மரணமில்லை எஸ்.கே. விஜயன் | 43.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை இருகு

மாவீரர் கல்லறையிலும் அழுகையோ
வேண்டாம்
சபதம் செய்யுங்கள்.






சிங்கள இரப்பர்த்தோட்டப் பொம்மை
பட்டாடையோடு
வன்னியில் தமிழன் கோவணத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*மற்றோர் ஒளிபெற*
*தான் அழிந்தது*
*தீக்குச்சி.*



*கோடிகளுக்கு ஆசைப்பட்டு*
*கொட்டிலை விற்றல்*
*குதிரைப்பந்தயம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழகியதோற்றம் அழுக்கில்லா உடை
கொழும்புவாழ் தமிழன்
நெஞ்சினில் மட்டும் படபடப்பு.



குருதிகொட்டி
பிள்ளை பணம் அனுப்புவான் என
அம்மா ஆனைமுடி காப்புக்கு ஆடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிக்கொல்லும் போட்டி
ஒலிம்பிக்கில் நடந்தது
தங்கம் அனைத்தும் ஸ்ரீலங்காவிற்கே.






இறந்தவர் வருகிறார்
வாக்களிக்கிறார்
தேர்தல் நாட்களில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியில் நீதியில்லை
அரசினர் கையில்
திருவோடு.






அம்மாவின் தொப்புள் கொடி
புதைந்தநாடு
பிள்ளையின் தாய்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதமும் பாகிஸ்தானும்
பேசித்தீர்க்கட்டும் பிரச்சனையை
அறிவுரை சொன்னது ஸ்ரீலங்கா.





லண்டனிலிருந்து மருத்துவர் ஓடிவந்தார்
வன்னிவாழ் மக்களுக்காகவல்ல
ஒரு ஆமைக்கு நோயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீர்க்கடைக்கார முதலாளி
அருந்தான்
தனது தேனீர்.






சமாதானப்புறாவின் ஆட்சியில்
பயன் பெற்றவன்
சவப்பெட்டிக்கடைக்காரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குண்டு துளைக்காத கூட்டுக்குள்
நின்றபடி கொண்டாடினர்
சுதந்திரப் பொன்விழா.



ரோஜாவுக்கும் முள்முருங்கைப்பூவுக்கும்
பூக்கடையில் கடும்சண்டை
பூமாலையில் சேரவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிளகாய்த் தோட்டமெல்லாம்
பூத்துப் போச்சுது
கட்டாயம் கிளிகள்வரும்
காவல் அவசியம்.




பள்ளிப்பிள்ளைகளை பெற்றோரே
செம்மணியில் புதைத்தவன்
வீரவன்னி விறகில் சங்கமம் இன்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்து நரையோடு
துணையின்றி
கரண்டடுப்பில் வேகுவான் பிள்ளை
அயல்நாட்டில்
பக்கத்தில் வீடுவாங்க
அனுப்புவான் காசு என்று
ஆவலோடு ஊரில்.





மதம்மாறுவது
அவனவன் சொந்தவிடயம்
ஆனால்
வேப்பமர நிழலைவிட
சிலுவையின் நிழல் மேலேன
போதனை சொல்லாதவரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியக் கலாச்சாரத்தை
இந்த உலகமே பாராட்டும்
அந்த
கள்ளிப்பால்
காரியம் மட்டும்
இல்லாதவரை.





மானிட உலகினில்
வாழ்வோரில்
தாம் சாகும்நாள் தெரிந்தவர்
எவருமில்லை
ஈழத்துக் கரும்புலிகளைத்தவிர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னூர் வானத்து நிலவு
அழகாகத் தெரிகிறதாம்
காயம்பட்ட ஓடுகளின்
ஓட்டைக்குள்ளால்.



முற்றத்து மாமரத்தில்
அணில் மூன்று மகாநாடு
கனிந்துவிழும் பழத்தைத் தடுக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனைமரம் வளர
தண்ணீர் விட்டவன் யார்
பங்கு போட்டுக்கொள்ள இன்று..!



கொழும்புப் பிணப் பெட்டிக் கடைக்காரன்
படைமேல் வழக்கு
வன்னிக்காய் ஆடர் இல்லையென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சமஸ்டிக்கு மறுப்பு
தமிழீழம் தருவதற்கோ...
பண்டா குடும்பத்திற்கு நன்றி.






வளர்த்தபசு கருக்கண்டதாக
வளர்த்தபாட்டி
கனவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடப்பட்டதால் தான்
தங்கம்
சபைக்கு வந்தது.




பிச்சைக்காரன் சத்தி எடுத்தான்
ஆளும் பிரதமரின்
பேச்சைப்போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பருவமலர்களின் கண்ணீர்த்துளி
பெற்றவர் நெஞ்சினில் சுமை.
சீதனப் படுகொடுமை.



முள்ளால் மூடி இருப்பதால்
பொல்லாப் பழமாகுமா
பலாப்பழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளைகள்தோறும் கிளிகளின் பேச்சு
பூக்கள்
எப்போது காயாகுமென்று.



கிணற்றுநீரில் தெரிந்தது
சிங்கத்தின் நிழல்
அதனுடைய ஆணவத்தோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்பனி இரவு
அகதி ஒருவன்
நாடு மாறுகின்றான்.




கடவுளை நேசிப்போர்
மறக்க வேண்டியது
மதத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*அப்பா நலமா! அம்மா நலமா!*
*வேரைத்தேடும் விழுதுகள்*
*முதியோர் இல்லம்.*




*படைமுகாம்பகுதி*
*பெண்கள் கடைவிரிக்க*
*அரசு அனுமதி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை இழந்த தாயின்
வயிற்றுப்பிள்ளை
புரட்சி.







வெறும்மரம்
அடியில் சருகுகள்
காலம் மாறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலில் குண்டுவந்தாலும்
வரவேற்பான்
ஈழத்துப் போராளி.





வன்னிக் கிராமமக்கள்
மருந்தும் உணவுமின்றி
வண்டிப்பாதையைப் பார்த்தபடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மல்லாந்து படுத்தபடி
துப்புவோன் செயலாய்
சந்திரிகாவின் அரசு.



தண்டவாள வாழ்க்கையாய்
தமிழினம் வாழும்வரை
எதிரி வண்டி ஓட்டத்தான் செய்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாட்டுக்கூட்டத்தை
வேலியாய் எண்ணும்வரை
தமிழ்ப்பயிர்கள் நாசம்தான்.






நட்டநடு நாற்சந்தி ஒன்றில்
தடுமாறுகிறது
சமாதானப்புறா ஸ்ரீலங்காவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சி இறக்கிய சோறும்
கணவனின் கோபமும்
நாளிகை சிலதான் ஆற.





யார்தான் இருவரையும் கூட்டிவந்தாலும்
சிங்கள இனவாதம் ஒரு நாளும்
மேடை போடாது பேச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனையாளின் நீளக்கூந்தல்
அழகாகவே இருக்கிறது
அவளுக்கு
அது சுமையாகுமோ
என்கிறது மனம்.





நெல் உரலில் விழுந்து இடிபட்டு
அரிசியானது
உண்ண.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*வன்னிக்கு அரசு பொருட்கள்*
*சோளப் பொரிபோல்*
*ஆனைப்பசிக்கு.*




*சாக்கில் எலி*
*சுவரில் அடி*
*தமிழர்நிலை புத்தரின் ஆட்சியில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்து கிடக்கும் கூட்டுக்குள்
கிளியைக் காணவில்லை
இராணுவப் பூனையின்வாயில்
பச்சைச் செட்டை.





சுடலைக்குப் போகும் வீதியில்
ரோசாப்பூக்கள்
கனக்கக் கொத்தாய்
கசங்கிக் கிடந்தன
போனது வசதியான பிணமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏழு வருசமாய் ஏக்கம்
சத்திக்கு
கமலாக்கா வீட்டில்







வெறும் நெற்றியுடன் அம்மா
பற்றி எரிந்தது
வயிறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*மகிழ்ச்சிக்கும் கவலைக்கும்*
*மது*
*மரணத்திற்கும் அதுவே.*




*பூட்டுத்தேவையில்லாத*
*பொருள்*
*கல்வி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*வீதியில் கிடந்தால் சாணி*
*விழாவுக்கு வந்தால் சாமி*
*தீயில் வீழ்ந்தால் வெண்ணீறு.*



*வான்முட்டப் பறந்தாலும் கொக்கு*
*இந்த மண்ணுக்கு வரவேண்டும்*
*பூமிதான் நிரந்தரம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*கதவுகள் திறக்கும்வரை*
*காத்திருக்காது*
*காற்று வீட்டுக்குள் வர.*



*ஆயுதங்களுக்கு*
*தெரியாதது ஒன்றேயொன்று*
*காயங்களின் வலி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஸ்ரீலங்காவின்*
*பல்குழல் யுத்தடாங்கிகள்*
*அகதி விண்ணப்பம் கேட்டன*
*புலிகளிடம்.*





*மாலைகள் தொடுக்கத்தான் நினைத்தேன்*
*அவர்களுக்காக*
*ஆனால்*
*மலர்கள்தான் உதிர்ந்துவிட்டனவே!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மரணங்களில்
பல ஒன்றாவது போல்
வாழ்வில்
ஒன்று பலவாதல்போல்
கடவுள் செத்தால்
மதங்கள் ஒன்றாகுமோ.





எதிர்கால மாணவன்
பயணம் செய்கிறான்
புத்தகப்பையுள்
போதைமருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளைநிலத்தில் பயிர்விளைந்தது
மாவீரர் புதைகுழியில் மட்டும்தான்
விளைந்தது வீரம்.



பரந்த ஏரியின் அருகில்
பட்டமரம் நிற்கிறது
புலம் பெயர்ந்த வாழ்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளையும் விடியும்
என்தூண்டில் புழுவில்
புலிகள் விழுவர்
சந்திரிகாவின் கனவு.



தமிழரின் கோவணமும்
சோதனை
குண்டு இருக்குமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரோஜாவுக்குப் பக்கலில்
முள்
படைத்தவனின் பகுத்தறிவு.



சிங்கம் கவ்விய
மான்குட்டிகள்
யாழ்வாழ் தமிழர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மூன்றாண்டாய்ப் பூவில்லை*
*முற்றத்து மாமரம்.*
*தேடுங்கள் வைத்தியரை.*





காய்க்காத ஒல்லித்தென்னைக்கு
உலக்கையிடி
விஞ்ஞானத்தில் மெய்ஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவிதை
இளமைக்குச் சிறகு
உலகைத்தேட.




கும்பிடக் கட்டினோம்
கோவில்கள்
சாதிச் சண்டைக்கும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதன் தோண்டிய
வெறும் கிணறுகள்
சாதியும் சமயமும்.



அம்மா இறந்தது பட்டினியால்
மண்டபம் எடுத்து
அந்திரட்டி செய்தது
வெளிநாட்டுப் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி இளைஞனுக்கு
அறிவுரை
எயிட்ஸ்.






மக்களில்லாத பிரதேசத்தில்
அம்மணி
ஆட்களை எண்ணினாளாம்
சனத்தொகைக் கணக்கெடுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உறவுகள் அனைத்தும்
முதுமையில் விலகின
உயிருள்ளவரை ஊன்றுகோல்மட்டும்.






பராமரிப்பு நிலையத்தில் பிள்ளை
அம்மா வேலைத்தலத்தில்
சட்டை நனைந்தது பாலில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*பொட்டு வைக்கிறாள்*
*விதவை*
*தன்பிள்ளைக்கு.*



**தவறணை மேசையில்**
**அப்பாவின் தொப்பி**
**சமத்துவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*மரணத்தின்*
*சரித்திரக் குரல்கள்*
*செம்மணிப் புதைகுழிகள்*



தொலைந்த கணவன்மாலை
தேடமுடியா சாவித்திரிக
ஈழத்திலுட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிருடன் உலவும்
ஊத்தைப்பிணம்
அகதி.





கணனிபற்றி
அரசு ஆலோசனை
வன்னியில் இல்லை கரும்பலகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடல் அலைகள்
கரையை நினைத்தன
புலம்பெயர் தமிழராய்.






காவேரியும் கங்கையும்
ஆறுகளாம்
ஈழவன் சொரியும் குருதி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காக்கையின் கூட்டில்
குலம்மாற்றாக் குயில்
ஐரோப்பாவில் நம்மில் பலர்?




அயலான் உள்ளம்கண்டு
அலறித் துடித்தது
அமாவாசை இருட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முற்றத்துத் தென்னைமரம்*
*பாளைகண்டது*
*வீட்டுக்காரன் கனவில்.*






*ஐரோப்பாச் சந்தையில்*
*ஏலம்*
*சந்திரிகாவின் பிச்சைப்பாத்திரம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை அனுபவத்திற்கு
அங்கீகாரம்
கன்னத்தில் வெள்ளைமுடி.






புதிய தலைமுறைக்கு
இடம்விட்டுச் செல்வதே
முதியோர் மரணங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிங்கள அரசியலில்*
*தமிழ்வாதம்*
*குத்தரிசியில் தவிடுபோல்.*







*மரண இரவில்*
*ஊரெங்கும் அவல ஓலங்கள்*
*இன்றைய ஈழத்தின் நிலையாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் பேசுவோரும்
சட்டப்படி கிரிமினல்கள்
சந்திரிகா சொல்கிறார்





பட்டுக்கு ஆசை
பட்டுப்பூச்சிகள் பல கொலை
சித்தாத்தருக்கு பதவியில் ஆசை
தமிழர் கொலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு சாண் வேலிக்காய்
சண்டையிட்டார்கள்
நாட்டுக்காய் ஒற்றுமை இன்று.




பள்ளம் நிரவவேண்டுமாம்
கதறினார்கள்
மலைசரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெள்ளைப்புறாவை
வெடிகுண்டாக்கினார்கள்.
அவர்கள் சிங்களவர்கள்.




கவிதை
ஒரு முறை ஒலித்தது
தூங்கியவனை எழுப்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*காதல்தான் அல்ல*
*வாழ்க்கை*
*அதற்கு வேண்டும் காதல்.*



*பாதம் காக்கும் எனக்கு*
*வீட்டுக்குள் இடமில்லையா?*
*செருப்பின் ஆதங்கம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைக்கும் அடிக்கும்
மரியாதை உண்டு
இல்லை அது உண்மைக்கு.






வந்தாற்தான் நிச்சயம்
வராவிட்டால் மரணம்
இன்றைய ஈழவன் நிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடிவீட்டு மெத்தை
மழலைக்குத் தவிப்பு
ஏழையினத்தடுக்கு தவிப்பது இடத்திற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைக்கூக்கவிதைகளை முதன்மைப்படுத்தி
வெளியிடு செய்யும் தமிழகத்தின் பிரபல சஞ்சிகைகளில்
ஒன்றான “ஏழைதாசன்” சஞ்சிகையின்
வாசகர் வட்டக் கருத்துக்கள்

.........................

டென்மார்க் பொன்னண்ணாவின் ஹைக்கூக் கவிதைகள் அருமையாக இருந்தது. வாழ்த்துக்கள்.

**திருச்சிற்றம்பலம் சுரேஸ்**
கடலூர்.

டென்மார்க் கவிஞர் பொன்னண்ணாவின் டென்மார்க் ஹைக்கூக்கள் தமிழர்களின் இன்றைய உணர்வை பிரதிபலிக்கின்றது.
வெளியிட்ட ஏழைதாசனுக்கு நன்றிகள்.

**கவிஞர் இரா. இரவி**
மதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க் பொன்னண்ணாவின் ஹைக்கூக்கள்
மிகவும் சிறப்பாக இருந்தது.
மிக்க நன்றி.

செ. கோவிந்தராஜன்
ஆசிரியர், திருச்சி.

✪

ஏப்ரல் இதழில் டென்மார்க் பொன்னண்ணாவின்
ஹைக்கூ முத்துமுத்தாய் இருந்தது.
வாழ்த்துக்கள்.

எஸ்.பி. அருண்
கோவை.

✪

டென்மார்க் பொன்னண்ணாவின்
ஹைக்கூக் கவிதையில்
''பயிர் நாசம்தான்'' என்றவரி
அருமை.

டாக்டர் ஜெய சிவராமன் நற்குணம்
தி.மலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✪

சர்வதேசத் தமிழர் இதழ் படித்தோம்
அதில்
வேலணையூர் பொன்னண்ணாவின்
"தமிழா எங்குதான் செல்வாய் இனி..."
என்ற கவிதை படித்தோம்.
உள்ளத்தைப் பிசைந்தது.
வாழ்த்துக்கள்.

கவிஞர் இலக்கியமுனிவர்
**வல்லிக்கண்ணன்...**
சென்னை

கவிஞர் **முகவை முனியாண்டி**
பக்தவச்சலம் நகர் வியாசர்பாடி
சென்னை.


✪

***கவிஞரின் பிற வெளியீடுகள்***

*நிலமாகி - கவிதைத் தொகுதி/ ஆடி 1993*
*அபிராமி அம்மன் பஜனைப்பாடல்கள் / ஆனி 1995*
*வெந்தவனம் - கவிதைத்தொகுதி / வைகாசி 1997*
*விநாயகர் பக்திபஜனைப் பாமாலை / ஆனி 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அத்தனை கவிதைகளிலும்

புதியபரிமாணங்கள்.

தமிழ்க்கவிதைஉலகில்

பொன்னண்ணாவிற்கு

நிச்சயம் வரலாற்று இடம்உண்டு

திரு.ம.ஜெகத் கஸ்பார்M.A

வேரித்தாஸ் வானொலி தமிழ்ப்பிரிவு இயக்குனர்.

"சமூக அவலங்கள்குறித்து

அங்கதச்சுவையுடன்

கவிதைஇயற்றுவதில்

தேர்ந்தவர் பொன்னண்ணா."

கவிஞர் இலக்கியமுனிவர் வல்லிக்கண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org